**2026.08.24 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01. தேசிய வணிக வசதிகள் நிலையத்தைத் தாபித்தல்**

பல்வேறு அரச நிறுவனங்களில் காணப்படுகின்ற அனுமதி பெற்றுக்கொள்கின்ற செயன்முறை, நிறுவனங்கள் குறைவான தொடர்பாடல்களுடன் தனித்து இயங்குதல், அவற்றில் காணப்படுகின்ற நிறுவன அதிகாரங்களின் மேற்பொருந்துகை (overlapped) தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நிரவாக ரீதியான வினைத்திறனின்மை போன்ற நிலைமைகளால் எமது நாடு உள்நாட்டு முதலீட்டுச் சவால்கள் பலவற்றுக்கு முகங்கொடுத்து வருகின்றது. அவற்றில்,ஒரு முதலீட்டுச் செயற்பாட்டுக்குரிய அங்கீகாரம் வழங்கும் செயன்முறையைத் தனித்தனியாக அரச நிறுவனங்களுக்கிடையே பகிரப்பட்டுள்ளமையால், உள்நாட்டு முதலீடுகளை ஆரம்பிப்பதில் முக்கிய சவாலாக உள்ளது. அதனால், கருத்திட்ட அபிவிருத்திக்கான காணிகளை ஒதுக்குதல், சுற்றாடல் அனுமதிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளல், மின் இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல், நீர் விநியோகம் மற்றும் வங்கி மற்றும் நிதியியல் வசதிகளைப் பெற்றுக்கொள்கின்ற பணிகளின் போது தொடர்ச்சியாகத் தாமதங்கள் நிலவுகின்றமை மற்றும் முதலீட்டாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதுடன், உற்சாகம் இழக்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. அதனால், வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான முதலீட்டு நேயம்மிக்க சூழலை உருவாக்குவதற்கு எமது நாட்டு தொழில்முயற்சியாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக தனியொரு ஒருங்கிணைப்பு நிறுவனத்தை தாபிக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, முதலீட்டாளர்களுக்கு வசதியளிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் தேசிய வணிக வசதிகள் நிலையத்தை தாபிப்பதற்கும், முதலீட்டுக்குக் காணப்படுகின்ற நிர்வாக ரீதியான தடைகளை நீக்கி கைத்தொழில் துறையில் கொள்கைத் தரமுயர்த்தலுக்கு உயரிய அதிகாரத்துடன் கூடிய குறித்த நிலையத்தை இயக்குவதற்கும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சித் துறைகளுக்கான மூலோபாயப் பணிச்சட்டகம் 2026-2035 மற்றும் திறன் விருத்தி முறைமைசார் நிலைமாற்ற வேலைத்திட்டம்**

தேசிய மற்றும் சர்வதேச உழைப்புச் சந்தையில் நிலவுகின்ற கேள்விக்கு நிகரான திறன்களுடன் கூடிய உழைப்புப் படையை உருவாக்குவதற்கு கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி, அரசின் தேசியக் கொள்கைகள் பணிச்சட்டகத்தின் கீழான மூலோபாயக் கூறாக அடையாளங் காணப்பட்டுள்ளது. சமகாலத்தில் அரச கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சி நிறுவனங்கள் அதிகமாக இயங்கி வந்தாலும், பயிற்சி வேலைத்திட்டங்களின் உள்ளடக்கம் மற்றும் உழைப்புச் சந்தையின் தேவைகளுக்கிடையில் காணப்படுகின்ற பொருத்தமற்ற தன்மையால் இத்துறைகளில் பல்வேறு சவால்கள் மேலெழுந்துள்ளன. இச்சவால்களை வென்றெடுத்து தொழிநுட்பவியல் மற்றும் தொழிற்கல்வித் துறையில் நீண்டகால அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான பிரதான வழிகாட்டியாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப



163, කිරුළපන මාවත, කොළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු තො T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

ஒத்துழைப்புக்களுடன் கூடிய 2026-2035 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சித் துறைக்கான மூலோபாய பணிச்சட்டகம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த மூலோபாயப் பணிச்சட்டகத்திற்கமைய 'திறன் அபிவிருத்தி முறைமைசார் நிலைமாற்ற நிகழ்ச்சித்திட்டம்' (Skills Development System Transformation Programme) இனை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் மூலம் உயர்தர தொழிற்கல்விப் பாடவிதானத்தைப் பலப்படுத்தல், தொழிற்கல்வி நிர்வாகக் கட்டமைப்பை முறைமைப்படுத்தல், கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரப்பண்பு மற்றும் ஏற்புடையதன்மையை அதிகரித்தல், சமத்துவத்துடன் கூடிய அணுகலை விரிவாக்கம் செய்தல், பயிற்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் திறன் விருத்தி போன்ற பணிகளுக்கான நிலைபேறான நிதியிடல் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதற்காக இலங்கை அபிவிருத்திப் பங்காளர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சித் துறைக்கான தேசிய மூலோபாயப் பணிச்சட்டகம் 2026-2035 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு எமது நாட்டு கைத்தொழில் மற்றும் தொழிற்கல்வி பயிற்சித் துறையின் தேசிய மூலோபாயப் பணிச்சட்டகத்திற்கான 'திறன் அபிவிருத்தி முறைமைசார் நிலைமாற்ற நிகழ்ச்சித்திட்டத்தை' 2027-2031 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அமுல்படுத்துவதற்கு கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. உலக சுகாதார அமைப்பால் விதந்துரைக்கப்பட்டுள்ள அனைத்துலக சுகாதாரம் மற்றும் முற்கூட்டிய தயார்நிலை மீளாய்வுக் கூட்டத்தை இலங்கையில் நடாத்துதல்

உலக சுகாதார அமைப்பு தனத உறுப்பு நாடுகளின் சுகாதாரம் மற்றம் அரசர நிலைமைகளை அடையாளங்காணல், தடுத்தல் மற்றும் அவற்றுக்கு பதிலளிப்பதற்கான இயலுமையை விருத்தி செய்யும் நோக்கில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் நாட்டின் தலைமையிலும் மற்றும் ஏனைய நாடுகளின் இணை மீளாய்வுகளின் புதிய சுய மதிப்பீட்டு முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 'அனைத்துலக சுகாதாரம் மற்றும் முற்கூட்டிய தயார்நிலை மீளாய்வு' எனும் பெயரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இம்மதிப்பாய்வு, 'ஒட்டுமொத்த அரசும்' மற்றும் 'ஒட்டுமொத்த சமூகமும்' எனும் கருத்தியலுக்கமைய உயர்மட்ட அரச அர்ப்பணிப்புக்கள் மற்றும் அரசியல் தலைமைத்துவத்தின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தால் குறித்த மீளாய்வை நடாத்துவதற்கு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள அழைப்புக்கு இலங்கை அரசு உடன்பாடு தெரிவித்துள்ளது. இம்மீளாய்வின் மூலம் எமது நாட்டுக்குரிய இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பான தேசிய மற்றும் சர்வதேச மதிப்பாய்வுச் செயன்முறைகளுக்கு மேலதிகமாக சுகாதாரப் பாதுகாப்புக்கான துறைசார் ஒருங்கிணைப்புக்களின் நடவடிக்கைகளைப் பலப்படுத்தல், உயர்ந்த நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் நிதி அர்ப்பணிப்புக்களை உறுதிப்படுத்துவதற்கு இயலுமை கிட்டும். அதற்கமைய, சுகாதாரப் பாதுகாப்ரப பலப்படுத்துவதற்காக இலங்கையின் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தி 'அனைத்துலக சுகாதாரம் மற்றும் முற்கூட்டிய தயார்நிலை மீளாய்வை' இலங்கையில் நடாத்துவதற்கு சுகாதாரம் மற்றும்

வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பிரதேச நிர்வாகத்தில் பிரஜைகளை மையமாகக் கொண்ட ஆட்சி மற்றும் முன்னிணை அரச சேவைகள் வழங்குவதைப் பலப்படுத்துவதற்கான 'மக்கள் துடிப்பு' (SL – PULSE) கருத்திட்டத்தை அமுல்படுத்தல்**

இலங்கையின் பிரதேச நிர்வாகக் கட்டமைப்பானது, 25 மாவட்டச் செலகங்கள் மற்றும் 341 பிரதேச செயலகங்களைக் கொண்டமைந்துள்ளது. இந்நிறுவனங்கள் மூலம் சமுதாய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு, அரச காணி நிர்வாகம், அனர்த்த முகாமைத்துவம், சிவில் பதிவுகள், ஓய்வூதியம் தொடர்பான சேவைகள் மற்றும் ஏனைய பிரஜைகளை மையமாகக் கொண்ட நிர்வாகப் பணிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொதுச் சேவைகள் பல வழங்கப்பட்டு வருகின்றன. இச்சேவைகளுக்கான அணுகல் மற்றும் அனுபவங்களை முறையான வகையில் பெற்றுக் கொள்வதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்கான பொறிமுறையொன்றை நிறுவ வேண்டிய தேவையைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் முன்னணி அரச சேவைகளின் பிரஜைகள் பதிலளிப்புக் கருத்துக்கணிப்பை நடாத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புக்களின் கீழ் 'மக்கள் துடிப்பு' (SL_PULSE) கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. திறந்த மக்கள் பங்கேற்பு, சமுதாய அடிப்படையிலான கருத்துக்கணிப்பு மற்றும் எழுந்தமான கருத்துக்கணிப்பு போன்ற மட்டங்களின் கீழ் பொதுமக்கள் பங்கேற்பு, பிரஜைகளுக்கான பொறுப்புக்கூறல், ஊழலைக் குறைத்தல், அரச நிர்வாக செயல் ஒழுங்குகள், அரச சேவைகள், சுற்றாடல் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல் போன்ற ஏழு (07) பிரதான துறைகளை உள்ளடக்கிய வகையில் 13,000 – 15,000 இற்கும் இடையிலான பிரஜைகளை பங்குபற்றச் செய்து உரிய கருத்துக்கணிப்பை நாடளாவிய ரீதியில் மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, பெற்றுக் கொள்ளப்படும் தரவுகளைப் பகுப்பாய்வு செய்து பொதுமக்களுக்கான சேவைகளை வழங்கும் போது வினைத்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதற்குத் தேவையான மறுசீரமைப்புக்களை அமுல்படுத்துவதற்கு இயலுமாகும் வகையில் 'மக்கள் துடிப்பு' (SL_PULSE) கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்பு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. தேசிய சேமிப்பு வங்கிக்கான பாதுகாப்பு சேவைகளுக்கான பெறுகை**

தேசிய சேமிப்பு வங்கியின் தலைமையகம் மற்றும் நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கிளைகளுக்கு பாதுகாப்பு சேவைகளை வெளிவாரியாக சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதுடன், குறித்த சேவைகளுக்கான பெறுகையை மேற்கொள்வதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 14 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர்,உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரைகளின் அடிப்படையில், 2026.10.01 தொடக்கம் 02 ஆண்டுகளுக்கு தேசிய சேமிப்பு வங்கியின் பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தங்கனை கீழ்க்காணும் வகையில்

வழங்குவதற்காக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| **நிறுவனத்தின் பெயர்** | **தொகுதி இலக்கம்** | **தொகுதிக்கான மொத்தப் பெறுமதி ரூபாய் மில்லியன் (பெறுமதி சேர் வரியில்லாமல்)** |
|---|---|---|
| Brave Guard Security & Investigation Services (Pvt) Ltd | Lot 01<br>Lot 02 | 209.11 |
| Gajashakthi Security Services (Pvt) Ltd | Lot 03 | 115.45 |
| X Force Security Services (Pvt) Ltd | Lot 04<br>Lot 12 | 187.69 |
| Secure Security & Investigation (Pvt) Ltd | Lot 05<br>Lot 11 | 166.98 |
| Crown Royal Security Services (Pvt) Ltd | Lot 06<br>Lot 09 | 193.54 |
| Dilco Security and Investigation (Pvt) Ltd | Lot 07 | 78.31 |
| REDFORCE Security (Pvt) Ltd | Lot 08<br>Lot 10 | 165.74 |

**06. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் I, III மற்றும் IV ஆம் பகுதிகளுக்கான இணைப்பு வீதிகளை அபிவிருத்தி செய்தல்**

மத்திய அதிவேக நெடுஞ்சாலை வீதிக் கருத்திட்டம்நான்கு பகுதிகளாகப் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், இவ்வீதிகள் மேல் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் காணப்படுகின்ற வீதி வலையமைப்புக்களுடன் இணைப்புச் செய்வதற்கான இணைப்பு வீதிகளை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்மூலம், வீதி வலையமைப்புக்களுக்கிடையே வினைத்திறனான தொடர்புகள், அணுகல் வசதி மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்துக்களை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, மத்திய அதிவேக நெடுஞ்சாலை வீதியின் I ஆம் பகுதிக்கு 117.68 கிலோமீற்றர் நீளத்துடன் கூடிய 12 இணைப்பு வீதிகள், மத்திய அதிவேக நெடுஞ்சாலை வீதியின் III ஆம் பகுதிக்கு 83.98 கிலோமீற்றர் நீளத்துடன் கூடிய 14 இணைப்பு வீதிகள், மத்திய அதிவேக நெடுஞ்சாலை வீதியின் IV ஆம் பகுதிக்கு 81.36 கிலோமீற்றர் நீளத்துடன் கூடிய 09 இணைப்பு வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக தற்காலிக மொத்தச் செலவு மதிப்பீடு 104.9 மில்லியன் ரூபாய்களாகும். அதற்கமைய, மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் I, III மற்றும் IV ஆம் பகுதிகளுக்கான இணைப்பு வீதிகளை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தை 2026-2030 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. ‘தித்வா’ புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள 14 பாலங்களை மீள்கட்டமைக்கும் கருத்திட்டம்**

‘தித்வா’ புயல் அனர்த்தத்தால் சேதமடைந்துள்ள மேல் மாகாணம், சப்பிரகமுவ மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களில்அமைந்துள்ள 14 பாலங்களை மிள்கட்டமைப்பதற்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு சீன குடியரசின் நிதியுதவி வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. இக்கருத்திட்டத்தை 02 கட்டங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கும், 18 மாத காலப்பகுதியில் முதலாம் கட்டத்தின் கீழ் 09 பாலங்களை மீள்கட்டமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த மீள்கட்டமைப்புப் பணிகளுக்கு சீன குடியரசால் 79 ரெனின்பி மில்லியன்களை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் சீன குடியரசுக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கும், கருத்திட்டத்தை இலங்கை அரசு திட்டவட்டமான கருத்திட்டமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. கட்டுநாயக்க பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வருகைதரு மண்டபத்தில் சுற்றுலாத்துறை சேவைகளுக்கான கருமபீடத்தை இயக்குவதற்கான பெறுகையை வழங்குதல்**

கட்டுநாயக்க பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வருகைதரு மண்டபத்தில் சுற்றுலாத்துறை சேவைகளுக்கான 06 கருமபீடங்களை இயக்குவதற்குத் தகைமையுடைய நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்கு 10 விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவின் விதந்துரைகளுக்கமைய, 03 ஆண்டுகளுக்கு கீழ்க்காணும் வகையில் குறித்த பெறுகைகளை வழங்குவதற்கு துறைமுகங்கள், சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

| சுற்றுலாத்துறை சேவை கருமபீட இலக்கம் | விதந்துரைக்கப்பட்டுள்ள விலைமனுதாரர் | ஒப்பந்தப் பெறுமதி ரூபாய் மில்லயின் (வரியில்லாமல்) |
|---|---|---|
| 10 | M/s Casons Travel (Private) Ltd | 251.03 |
| 11 | M/s J N W Lanka Tours | 209.67 |
| 12 | M/s Awavia Tours (Private) Ltd | 189.66 |
| 13 | M/s Ceylon Arrivals (Private) Ltd | 183.60 |
| 14 | M/s Ayubowan Tours & Travels (Private) Ltd | 171.53 |
| 15 | M/s Explore Vacations and Travels (Private) Ltd | 234.73 |

**09. திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய இதயநோய் பிரிவுக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் மற்றும் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் இதய நோய் மற்றும் இதயக் குழாய் சத்திர சிகிச்சைக்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல்**

இதயநோய் அடையாளங்காணல் மற்றும் சிகிச்சைச் சேவைகளைப் பலப்படுத்தும் நோக்கில் சுகாதார மற்றும் மருத்துவ சேவைகளை மேம்படுத்தும் கருத்திட்டமானது, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் நிதியுதவியின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் கீழ் கண்டி தேசிய மருத்துவமனை, அநுராதபுரம், குருநாகல் மற்றும் பதுளை போதனா மருத்துவமனைகள் மற்றும் திருகோணமலை மாவட்ட மருத்துவமனையின் இதயநோய் சிகிச்சைகளுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் 01 ஆவது தொகுதியின் கீழ் திருகோணமலை மாவட்ட மருத்துவமனையின் புதிய இதயநோய் பிரிவுக்கான கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் மற்றும் தொகுதி 03 இன் கீழ் அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் இதய நோய் மற்றும் இதயக் குழாய் சத்திர சிகிச்சைக்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தகாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான கடன் ஒப்பந்த ஏற்பாடுகள் மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் பெறுகை வழிகாட்டிக்கமைய விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் வழங்கப்பட்டுள்ள விதந்துரைக்கமைய, M/s Maga Engineering (Pvt) Ltd இற்கு கீழ்க்காணும் வகையில் குறித்த ஒப்பந்தங்களை வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

| தொகுதி | ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபாய் மில்லியன் (பெறுமதி சேர் வரியில்லாமல்) |
|---|---|
| 01. திருகோணமலை மாவட்ட பொது மருத்துவமனையின் புதிய இதயநோய் பிரிவுக்கான கட்டிடத்தை நிர்மாணித்தல் | 2,036.46 |
| 02. அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் இதய நோய் மற்றும் இதயக் குழாய் சத்திர சிகிச்சைக்கான கட்டிடத்தொகுதியை நிர்மாணித்தல் | 3,004.88 |

### 10. நுகர்வுக் காலத்தை அடிப்படையாகக் கொண்ட (Time of Use) கட்டணப் பட்டியல் முறைமையுடன் கூடிய திறன் மானிகளை (Smart Meters) நிறுவும் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

நாட்டில் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான முயற்சிகளை வலுப்படுத்துவதற்கான குறைநிரப்புக் கருத்திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் சிறு செலவுகள் நிதியிடல் வசதிகள் மூலம் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றுக் கொள்வதற்காக 2024.10.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இக்கடன் தொகையில் மஹஓயா பம்பி நீர்ச் சேகரிப்பு மின்னுற்பத்தி நிலையத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் விபரத்திட்டம் மற்றும் பெறுகை ஆவணங்களைத் தயாரிப்பதற்கு 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்துவதற்கு 2025.09.03 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 12.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி இலங்கை திறன் வலையமைப்புக்களை நவீனமயப்படுத்தல் ஆரம்பகட்ட நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, நுகர்வுக் காலத்தை அடிப்படையாகக் கொண்ட (Time of Use) கட்டணப் பட்டியல் முறைமையுடன் கூடிய திறன் மானிகள் (Smart Meters) 300,000 இனை நிறுவும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, 02 ஆண்டுகளுக்கு இக்கருத்திட்டத்தை இலக்கரிசிட்டி டிஸ்ரிபியூசன் லங்கா (பிறைவெட்) லிமிட்டட் மூலம் அமுல்படுத்துவதற்கு வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 11. உலக வங்கியின் நிதியிடலுக்கான 'Tourism for Heritage, Resilience, Inclusion and Value – driven Employment (THRIVE) – Nature' கருத்திட்டத்தைத் தயாரித்தல்

சூழல்நேய சுற்றுலாத்துறைக் கருத்திட்டத்திற்கு எமது நாட்டில் அதிக ஆற்றல்வளங்கள் காணப்பட்டாலும், சமகாலத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுகையில் வருமான அதிகரிப்பு வேகம் குறைவான பெறுமதியைக் கொண்டிருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. சூழல்நேய சுற்றுலாத்துறைத் துறைகளின் வதிவிடங்களை மேம்படுத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 'Tourism for Heritage, Resilience, Inclusion and Value – driven Employment (THRIVE) – Nature' எனும் பெயரிலான கருத்திட்டத்தைத் தயாரிப்பதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைத் தயார் செய்வதற்கான கருத்திட்டங்களை தயார் செய்யும் மானிய வசதிகள் (Grant

Facility for Project Preparation – GFPP) இன் கீழ் 18 மாத காலப்பகுதிக்கான ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு உலக வங்கி விருப்பம் தெரிவித்துள்ளது. உலக வங்கியின் நிதி ஒத்துழைப்பின் கீழ் அமுல்படுத்தப்படும் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்கும் இவ் உத்தேச கருத்திட்டத்தின் மூலம் ஒத்துழைப்புக்கள் வழங்கப்படும். அதற்கமைய, குறித்த நிதியுதவியைப் பொறுப்பேற்பதற்கும், இந்நிதியைப் பயன்படுத்தி உத்தேச கருத்திட்டத்தை தயாரிப்பதற்கும் சுற்றாடல் அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**12. 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பகுதியளவு உரித்துடன் தொடர்புடைய ஒழுங்குவிதிகளைச் சமர்ப்பித்தல்**

கம்பனிகளின் பகுதியளவு உரித்தைப் பதிவு செய்தல் தொடர்பான சட்டத் தேவைகளை உள்ளடக்கி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தைத் திருத்தம் செய்வதற்காக 2025.07.21 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கம்பனிகள் (திருத்தச்) சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தயாரிக்கப்பட்டுள்ள 2026 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கம்பனிகள் (பகுதியளவு உரித்து) ஒழுங்குவிதிகள், 2480/48 ஆம் இலக்க மற்றும் 2026.03.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**13. குடியியல் வழக்குக் கோவை (திருத்தச்) சட்டமூலம்**

சாட்சியங்களை செவிப்புல கட்புல இணைப்புக்கள் மூலம் தரப்பினர்களின் உடன்பாட்டின் அடிப்படையில், நீதிமன்றில் விசாரிக்கப்படும் வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக தரப்பொன்று அல்லது தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளின் அடிப்படையில் அல்லது தனது நகர்வுப்பத்திரத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கோரிக்கைக்கமைய, இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே எந்தவொரு இடத்திலிருந்தும் நிகழ்நிலையில் செவிப்புல கட்புல இணைப்புக்கள் மூலம் சாட்சியங்களை வழங்குவதற்காக நபர்களை உட்படுத்துவதற்கு நீதிமன்றத்திற்கு அதிகாரமளித்து குடியியல் வழக்குக் கோவையின் குறித்த ஏற்பாடுகளைத் திருத்தம் செய்வதற்காக 2025.01.20 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள குடியியல் வழக்குக் கோவை (திருத்தச்) சட்டமூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றுள்ளது. இச்சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் பாராளுமன்ற அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**14. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பதவிக்கு நியமித்தல்**

தற்போது வெற்றிடமாகவுள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் பதவிக்கு எயார் வயிஸ் மார்சல் (ஓய்வுநிலை) திரு. துசார இந்துனில் பர்னாந்து அவர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஒப்பந்த அடிப்படையில் நியமிப்பதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

15. **இலங்கையில் சுகாதார சேவைகளில் 'விசேட நிபுணத்துவ மருத்துவம் மற்றும் விசேட நிபுணத்துவ பல் மருத்துவ சேவைகள்' எனும் பெயரிலான சேவை வகுதியை நிறுவுவதற்குரிய சேவை யாப்பை வரைவாக்கம் செய்தல்**

மருத்துவம் மற்றும் பல் தருத்துவ விசேட நிபுணத்துவ சேவைகள் வகுதியை நிறுவுதல் தொடர்பான விதந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கு 2026.01.12 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதுதொடர்பாக விரிவாக மீளாய்வொன்றை மேற்கொண்டு அவ்வதிகாரிகள் குழு அறிக்கையொன்றை சமர்ப்பித்துள்ளது. இவ்வறிக்கையின் விதப்புரைகளைக் கருத்தில் கொண்டு, விசேட நிபுணத்துவ மருத்துவம் மற்றும் விசேட நிபுணத்துவ பல் மருத்துவ சேவைகள் எனும் பெயரில் சேவைகள் வகுதியொன்றை நிறுவுவதற்கும், இச்சேவை வகுதிக்குரிய சேவை யாப்பை வரைவாக்கம் செய்வதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன உடக அமைச்சின் செயலாளரின் தலைமையிலான அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கும் சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

**தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.**